**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4520

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.10.2021

Accepted: 01.12.2021

Published: 01.01.2022

Citation:
Vaman, N. "Saivite Sects Depicted in the Periyapuranam." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 82–90.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4520

*Corresponding Author:
vamannagaiah@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Saivite Sects Depicted in the Periyapuranam

**Mr. N. Vaman**
*Senior Lecturer, Department of Hindu Civilization*
*Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka*
https://orcid.org/0000-0001-7787-7837

**Abstract -** Among the Thirumuraikal texts considered excellence for Hindu religious people, the twelfth Thirumuraikal text recited by Sekkizhaar called Periyapuranamn emerged in the Chola period. This literature isextoled by Cholars as the world common text and great epic. In the Periyapuranam where the history of Siva's disciples is excellently described and the accounts about saivite sects which hold Siva as a complete whole is also mentioned The objective of this study is to find out the quality of savite texts depicting mode and revealing the same . This study will be undertaken on the basis of descriptive methodology. Sekkizhaar's Periyapuram has been used as source text for this study. Religion, Although many sects may have appeared, in the Saiva religion Pasupatham,Kabaligam, kalamugam, Maviratham, Vamam Pairavamand those who follow such religious sects those follow such sects luxurious emergence, life method, methods of worshipping are being brought outin this study.

**Keywords:** Periyapuranam, Pasupatham, Kaapalikam, Kaalamukam, Maaviratham, Vamam Pairavam.

## References

1. Nadarasan, P R. 2011. *Periyapuranam*. Origin version, Chennai, Uma publication.
2. Erasamanickanar, M. 1969. *Pallavar Varalaru*, Chennai, Kazaka veliyedu.
3. Paramasivam, T. 2005. *Samayankalin Arasiyal*, Chennai, Kangu veliyedu.
4. Kanthiah, M. 1998. *Saivasiddhanta Nokkil Kailasapaty Smiruti*, Sri Lanka, University of Jaffna.
5. Selvamanokaran, T. 2014. *Thevarankaloodu pulappadum saivap privukal*, Moovar thamilum saiva erium, Colombo, Hindu religious and cultural affairs.
6. Erasamanickanar, M. 2011. *Saivasamaya Valarchi*, Chennai, Poompukar Patippakam.
7. Veluppillai, A. 1997. *Inthu veliyilirunthu Thirukonamalai vrai thenkilakutthisai valivanta pasupatham*. Thamilosai, Jaffna, Thamil manram.
8. Erasamanickanaar, M. 1948. *Periyapurana Aarachi*, Chennai, Madal Publication.
9. Vellupilllai, A. 2013. *Saivasamayam Anrum Inrum Ingum*. Colombo, Kumaran Putthaka Illam.
10. Kirishnaraja, S. 2004. *Inthuk kalai kolkai*, Colombo, Kumaran Putthaka Illam.

# பெரியபுராணம் சித்திரிக்கும் சைவப் பிரிவுகள்

***நா. வாமன்***
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*சைவ சமயத்தவர்களுக்குச் சிறப்பு நூலாகக் கருதப்படும் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக அமைவது சேக்கிழாரால் பாடப்பட்ட பெரியபுராணமாகும். சிவனடியார்களின் வரலாற்றினைச் சிறப்பாக எடுத்துரைக்கும் பெரியபுராணத்தில் சிவன் குறித்தும் சிவனை முழுமுதலாகவுடைய சைவப்பிரிவுகள் குறித்தும் ஆங்காங்கே விளக்கப்பட்டுள்ளன. சைவப்பிரிவுகள் பெரியபுராணத்தில் சித்திரிக்கப்படும் தன்மையினைக் கண்டறிந்து வெளிப்படுத்துதலை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. விபரண ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இவ் ஆய்விற்கு சேக்கிழாரின் பெரியபுராணம் மூல நூலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சைவசமயத்தில் பல பிரிவுகள் தோன்றியிருப்பினும் பாசுபதம், காபாலிகம், காளாமுகம், மாவிரதம், வாமம், பைரவம் எனும் சைவப்பிரிவுகள், அச்சமயப் பிரிவுகளைப் பின்பற்றுபவர்களின் தோற்றப் பொலிவு, வாழ்க்கை முறை, வழிபாட்டு முறைகள் முதலியன இவ்வாய்வில் வெளிக்கொணரப்படுகின்றன.*

***திறவுச்சொற்கள்:*** *பெரிய புராணம், பாசுபதம், காபாலிகம், காளாமுகம், மாவிரதம், வாமம், பைரவம், சேக்கிழார்.*

## அறிமுகம்

அருண்மொழித்தேவர் என்னும் இயற்பெயர் கொண்ட சேக்கிழாரால் பாடப்பட்டது பெரியபுராணம். 4250 செய்யுட்களைக் கொண்ட இந்நூல் சுந்தரர் வரலாற்றினையும் அவரால் திருத்தொண்டர்த் தொகையில் குறிக்கப்பெற்ற அடியார் வரலாறுகளையும் எடுத்துரைக்கின்றது. தமிழ்நாட்டில் சைவ சமயம் தொடர்பாக உருவாக்கப்பட்ட முதற்காவியம் இதுவேயாகும். சாதி, மதம், இனம் என்ற வேறுபாடுகளின்றிச் சிவனடியார் யாவரையும் ஒரே நிலையில் வைத்து அவர்தம் சாதனைகளைப் பக்தியுணர்வோடு பாடிய வகையிலே சேக்கிழாரின் பெரியபுராணம் தன்னிகரற்று விளங்குகின்றது. சிவநெறியின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கியே சேக்கிழார் பெரியபுராணம் செய்துள்ளார். அவ்வகையில் சிவனை முழுமுதலாக உடைய சைவத்தின் பிரிவுகள் பெரியபுராணத்தில் சித்திரிக்கப்படும் தன்மையினை ஆராய்வதாகவே இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

அகப்புறச் சமயங்கள் என பின்னாட்களில் வகைப்படுத்தப்பட்ட பாசுபதம், காபாலிகம், காளாமுகம், மாவிரதம், வாமம், பைரவம் எனும் சைவப்பிரிவுகளைச் சேக்கிழார் அறுவகைச் சமயம் என்றே குறிப்பிடுகின்றார். பொதுவாக, அறுவகைச் சமயங்கள் எனும் போது சங்கரரால் பிரதிஸ்தாபகம் செய்யப்பட்டதாகக் கருதப்படுகின்ற சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய சமயப் பிரிவுகளையே குறிப்பர். ஆனால், சங்கரருக்கு முன்னர் வாழ்ந்த திருமூலர், அப்பர், சம்பந்தர் முதலான அடியார்கள் அறுவகைச் சமயங்களாக சைவத்தின் பிரிவுகளையே குறித்தனர்.

அவ்வடியார்களின் வரலாற்றைப் பாடிய சேக்கிழாரும் இச்சைவப் பிரிவுகளை அறுசமயம் என்றே குறிப்பிடுகின்றார். திருஞானசம்பந்தரின் திருமணக் கோலத்தைக் காணச் சிவனடியார்கள் ஊர்வலமாகச் சென்றனர் என்பதனைக் கூற விழைந்த சேக்கிழார்,

**"அறுவகை விளங்கும் சைவத்து**
**அளவு இலா விரதம் சாரும்**
**நெறிவழி நின்ற வேடம்**
**நீடிய தவத்தினுள் ளோர்**
**மறுஅறு மனத்தில் அன்பின்**
**வழியினால் வந்து போகக்**
**குறிநிலை பெற்ற தொண்டர்**
**குழாம்குழாம் ஆகிஏக"** *(பா:3106)*

என்று பாடியிருத்தல் குறிப்பிடத்தக்கது. இவர்க்குப் பின்னர் வந்த அருணந்தி சிவாச்சாரியாரும், "அறுவகை சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம் குறியதுஉடைத்தாய்." (சி.சித்.சுப:01) என்று இயம்புதல் சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வறுவகைச் சைவப் பிரிவுகள் பற்றிச் சேக்கிழாரின் காலத்திற்கு முன்னரே எழுந்த பல இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. வடமொழியில் எழுந்த வாமன புராணம், இலிங்கபுராணம், ஸ்கந்த புராணம், வாயு புராணம் என்பவற்றிலும் மகாபாரதத்திலும் ஆகமங்களுள் சுவாயம்புவம், சுப்பிரபேதம் என்பவற்றிலும் இப்பிரிவுகள் சிலவற்றைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. (கந்தையா, மு., 1998:112) வடநாட்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த இப்பிரிவுகள் அங்கிருந்தே தமிழ்நாட்டிற்கு வந்ததாகக் கருதப்படுகின்றது. (செல்வமனோகரன், தி., 2014: 50)" அப்பல பிரிவினர் பௌத்தரும் சமணரும் தெற்கே வந்த பொழுதோ அதற்கு முன்னரோ, பின்னரோ தென்னாடு புக்கார்" (இராசமாணிக்கனார், ம., 1968:271) என இராசமாணிக்கனார் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. மேலும், பாசுபதர், காபாலிகர், காளாமுகர் எனும் பெயர் வழக்குகள் தமிழ்ப் பெயர்களாக இல்லை என்றும் அவர் குறிப்பிடுகின்றார். (மேலது: 271) இவற்றைப் போலவே மாவிரதிகள் (வெண்தலை மாலை விரதிகள்) என்ற அப்பர் குறிப்பிடும் பெயர் வழக்கும் தமிழாக இல்லை என்பார் தொ. பரமசிவன் (பரமசிவன், தொ., 2005:9). தமிழில் எழுந்த திருமந்திரம், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களிலும் தேவார முதலிகளுடைய பாடல்களிலும் இச்சைவப் பிரிவுகள் தொடர்பாகப் பேசப்பட்டுள்ளன.

சேக்கிழார் இச்சைவப் பிரிவுகள் பற்றிக் குறிப்பிடும்பொழுது சில சைவப் பிரிவுகளை நேரடியாகப் பெயர் சுட்டிக் குறிப்பிடுவார். (சிறுத்தொண்ட நாயனார் புராணத்திலே பைரவர் பற்றியும், மானக்கஞ்சாற நாயனார் புராணத்திலே மாவிரதியர் பற்றியும் வெளிப்படையாகக் குறித்துள்ளார்.) சில இடங்களில் அவர்களுக்குரிய சில பண்புகளை மட்டும் குறிப்பிடுவதால் அவர்களை எப்பிரிவைச் சார்ந்தவர்கள் என்று வகைப்படுத்துவதிலே பிரச்சினை எழுகின்றது. பாசுபதர், காபாலிகர், காளாமுகர் என்ற சமயப் பிரிவுகளிடையே சில அடிப்படையான வேறுபாடுகள் காணப்படுகின்றபோதிலும் ஒரு விதத்திலே நெருங்கிய ஒற்றுமை உண்டு. மூன்று சமயப் பிரிவினரும் சிவபெருமான் நடனமிடும் இடமாகச் சுடுகாட்டைக் கொண்டதுடன் சுடுகாட்டை வழிபடுமிடமாகவும் கொண்டுள்ளமையே இத்தகைய பிரச்சினைக்குக் காரணமாகிறது. இவற்றினையும் கவனத்திற்கொண்டு பெரியபுராணத்தில் இச்சைவப் பிரிவுகள் குறித்து நோக்கலாம்.

**பாசுபதம்**

பசுபதியை முழுமுதலாகக் கொண்ட சமயப் பிரிவு பாசுபதம் என்று அழைக்கப்படுகின்றது. இந்நெறியினைப் பின்பற்றுபவர்கள்தங்கள் உடம்பில் சாம்பலையும் திருநீற்றினையும் பூசுவர். திருவெண்ணீற்றுக் கோலமே பாசுபதம் என்பார் பண்டிதர் மு.கந்தையா.

(கந்தையா,மு., 1998:112) இவர்கள் சிவலிங்கத்தை வழிபட்டனர். சிவனுடன் கணங்களையும், பேய்களையும் இணைத்து வழிபட்டனர். முகத்திலும், தோளிலும், கொப்புளிலும், மார்பிலும் லிங்க முத்திரை இடம்பெற்றிருக்கும். (இராசமாணிக்கனார், ம., 2011: 75-76) இத்தகைய பாசுபதர்கள் பற்றிச் சேக்கிழார் பல இடங்களில் குறித்துள்ளார். சம்பந்தரது வரலாற்றைக் கூறுகையில் "சம்பந்தர் முத்துச் சிவிகையில் உலா வரும் பொழுதும் (பா:2551), பாண்டி நாட்டிற்குச் செல்லும் போதும் (பா:2595), பாண்டிய மன்னனை சைவத்துக்கு மீண்டும் மாற்றும் நோக்கில் திருவாலவாய்த் தலத்திற்குச் சென்ற போதும் (பா:2640) திருநீற்றுத் தொண்டர் குழாமாகிய பாசுபதர்களும் கூடச் சென்றார்கள் என்பதைப் பதிவு செய்கின்றார். மேலும், பெரும்பாலான பாடல்களில் திருவெண்ணீற்றுக் கோலத்தைத் தாங்கியவர்களாகவே பாசுபதர்கள் சுட்டப்படுவதை அவதானிக்க முடியும்.

**"மெய்வண்ண நீற்று ஒளி மேவும் குழாங்கள்"** (பா:1412)
**"திருநீற்றுச் சார்வினர்"** (பா:2465)
**"நீறுஅணி மேனியர்"** (பா:21)
**"செம்மேனி வெண்ணீற்றார்"** (பா:1966)
**"வெண்ணீற்றார் தம் திருமேனி"** (பா:2388)

எனப் பலவாறு எடுத்தாள்வது குறிப்பிடத்தக்கது. இவை பெரும்பாலும் பாசுபதர்களைக் குறிப்பினும் காபாலிக நெறியினர்க்கும் பொருந்துவனவாக அமைகின்றமையும் சுட்டத்தக்கது.

பாசுபதர்களின் வழிபடு கடவுளாகிய "பசுபதி" யினையும் சேக்கிழார் பெரியபுராணத்திற் குறித்துள்ளார். "படியார்க்கும் அறிவு அரிய பசுபதியார்" (பா:1375) எனத் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும், "பசுபதி தன் அருளாலே" (பா:3426) என்று ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலும் குறிப்பிடுவதை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். மேலும், பாசுபத அடியார்களின் தோற்றத்துடன் சிவன் வருதலையும் பல பாடல்களில் புலப்படுத்துகின்றார். திருநீலகண்ட நாயனார் புராணத்தில் அவ்வடியாரையும் அவர்தம் மனைவியையும் அக முரண்பாட்டினை நீக்கி இணைத்து வைக்கும் பொருட்டுப் பாசுபதர் வேடத்தில் இறைவன் தோன்றியதை:

**"கீளொடு கோவணம் சாத்திக் கேடுஇலா**
**வான்விடு நீற்று ஒளி மலர்ந்த மேனிமேல்**
**தோளொடு மார்பிடைத் துவளும் நூலுடன்**
**நீர்ஒளி வளர்திரு முண்டநெற்றியும்"**
(பா:370)

எனும் பாடலாற் குறிப்பார். மேலும், திருக்குறிப்புத் தொண்டர் நாயனாரைத் தடுத்தாட்கொள்ள சிவன் மேற்கொண்ட வடிவமும் (பா:1199), அமர்நீதி நாயனாரை ஆட்கொள்ள வந்த வடிவமும் (பா:510) பாசுபத வேடமே என்பதைச் சேக்கிழார் எடுத்துரைத்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

பாசுபதர்கள் தொடர்பாகச் சேக்கிழார் குறிப்பிடும் கருத்துக்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திற்குரியனவாகவே அமைந்துள்ளன. குறிப்பாகப் பல்லவர் காலப்பகுதியில் அச்சமயப்பிரிவு பெற்றிருந்த செல்வாக்கினை அதிகம் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. தமிழ்நாட்டில் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து பாசுபதரைப் பற்றிய குறிப்புக்கள் எதுவும் இல்லையென்று சேதுராமன், வேலுப்பிள்ளை ஆகியோர் குறிப்பிட்டுள்ள கருத்துக்களும் சுட்டிக்காட்டத்தக்கனவாகும். (வேலுப்பிள்ளை, ஆ., 1987:05) கருநாடக மாநிலத்திலே பன்னிரண்டாம் நூற்றாண்டில் வீரசைவர் அல்லது இலிங்காயுதர் என்ற இயக்கம் தொடங்கியதும், பாசுபதம் முதலிய பிரிவுகள் அதனுள் அமிழ்ந்துவிடுகின்றன.

தமிழ்நாட்டிலும் பன்னிரண்டாம் நூற்றாண்டிலே சைவசித்தாந்தச் சிந்தனை உருப்பெறத் தொடங்கிவிட்டது. எனவே தமிழ்நாட்டிலும் பாசுபதம் முதலிய பிரிவுகள் சைவ சித்தாந்த மார்க்கத்தினுள் அமிழ்ந்துவிட்டனவென்றே கொள்ளவேண்டும்.

### மாவிரதம்

சாம்பர் பூத்த செந்தழல் போல் திருமேனி, உச்சிக் குடுமியளவுக்கு மட்டும் விட்டு மழிக்கப்பட்ட தலை, உச்சிக் குடுமியின் மேல் எலும்பிற் கடைந்த ஒரு மணி, செவிகளில் எலும்புமணிக் குண்டலங்கள், எலும்பு மணிகளைக் கோத்தமைத்த தாழ்வடம், உள்ளிருக்குங் கோவண நிறம் வெளியிற் தோன்றக் காட்டும் மெல்லிய வெள்ளுடை, கேசவடப் பூணூல், திருவடிகளில் திருப்பஞ்ச முத்திரை என்ற இத்தோற்ற வேடம் மாவிரத வேடமாகிறது. (கந்தையா, மு., 1998:112) மண்டையோட்டில் பிச்சையேற்று உண்ணுதல், பிணச் சாம்பலை உடல் முழுவதும் பூசிக் கொள்ளுதல் என்பன மாவிரதிகளின் புறச்செயற்பாடுகளாகும்.

சேக்கிழார் மானக்கஞ்சாற நாயனார் புராணத்தில் இறைவன் மாவிரதியர் கோலம் கொண்டு அடியாரைச் சோதனை செய்ய வந்ததாகப் பாடியுள்ளார். வேளாண் குடியில் தோன்றியவர் மானக்கஞ்சாறர். சிவத் தொண்டர்க்கு இவர் ஏவல் புரிபவர். அவருக்குச் சில காலம் மகப்பேறு இல்லாமல் சிவன் திருவருளால் ஒரு பெண் பிறந்தது. அப்பெண் மணப்பருவம் அடைந்ததும் ஏயர் குலத்துத் தோன்றிய கலிக்காமர் என்பார்க்கு மணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தனர். மணம் செய்து கொள்ளும் பொருட்டுக் கலிக்காமர் சுற்றம்சூழ கஞ்சாறூர் நோக்கிப் புறப்பட்டார். எனினும் அவர் செல்வதற்கு முன்பே சிவபிரான் மாவிரதியார் வடிவங் கொண்டு மானக்கஞ்சாறர் வீட்டிற்கு வருகிறார். சிவன் கொண்ட அத்தோற்றத்தினைச் சேக்கிழார் நான்கு பாடல்களில் வர்ணித்துள்ளார். “ஈசன் நீறு புசிய நெற்றியின் மேல் முண்டித் திருக்கும் திருமுடியில் கொண்டிருக்கின்ற சிகையில் கோத்தணிந்துள்ள எலும்பு மணி சூடி, காதில் குண்டலம் அசைய, என்பு மணித் தாழ்வடம் மார்பில் புரள, தோளிப் பட்டிகையும், மயிர்க்கற்றைப் புணூலும் திகழ, திருநீற்றுப் பொக்கணமும், முன்கையில் மணி கோத்தணிந்த கயிறும், கோவணத்தின் மிசை அசையும் உடையும் உடையவராய் நடந்து வரும் திருவடியில் பஞ்சமுத் திரையும் திகழ்ந்திலங்க, மெய்யெலாம் நீறு புசிய பொலிவுடன் மானக்கஞ்சாறர் மனை புகுந்தார்”.(பா: 892-895)

மாவிரத முனிவரைக் கண்ட நாயனார் எதிர்கொண்டு பணிந்து வரவேற்றார். திருமணச் செய்தி கேட்டறிந்த மாவிரதியார் சோபனம் உண்டாக வாழ்த்தினார். மணக்கோலம் புண்டிருந்த மகளை வருவித்து விரதியரை வணங்கச் செய்தார். தன் காலில் விழுந்தெழுந்த மங்கையின் மலர்க் கூந்தல் கருமுகில் போல் தழைத்திருப்பதைப் பார்த்த மாவிரதியர், “இவள் தன் மயிர் நமக்குப் பஞ்சவடிக்குப் பயன்படும்” என்று தெரிவித்தார். (பஞ்ச வடி - மயிரால் செய்தணியும் புணூல்) அடியவர் கேட்டதை நிறைவு செய்வதைக் குறிக்கோளாகக் கொண்ட மானக்கஞ்சாறர் உடைவாளை உருவிக் கருங்கூந்தலை அரிந்தெடுத்து அவர்தம் மலர்க்கரத்தில் நீட்டினார். சோதிக்க வந்த பெருமான் வானிடை விடை மிசை அம்மையப்பராகக் காட்சி தந்து ஆட்கொண்டு அருளினார்.

திருமண நாளில் ஒரே ஒரு பெண் என்றும் பாராமல் மாவிரதியரின் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டுப் பஞ்சவடிக்காக கூந்தலைக் கொடுத்து ஈசன் அருளைப் பெற்ற மானக்கஞ்சாறாரின் செயல் அருஞ்செயலே என்பதைப் பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. பஞ்சவடி புணுதல் மாவிரதியர், பாசுபதர்

மரபு. இக்குறிப்புக்களை வைத்துக் கொண்டு சேக்கிழார் *37* பாடல்களில் இந்நாயனார் வரலாற்றினைப் பாடியுள்ளார். எனவே, சுந்தரர்க்குக் காலத்தால் முற்பட்ட மானக்கஞ்சாறர் காலத்தில் பாசுபதம், மாவிரதம் தமிழகத்தில் சில பகுதியிலாவது நிலவியிருத்தல் வேண்டும் என்பது புலனாகும்.

மானக்கஞ்சாறர் பிறந்த இடமாகிய ஆனந்த தாண்டவபுரத்தின் கீழ்ப்பகுதியில் "பஞ்சவடீசர்" ஆலயம் அமைக்கப்பட்டு அவ்வாலயத்தினுள்ளே மாவிரதியார், மானக்கஞ்சாறர் படிமங்கள் வைத்துப் புசிக்கப்பட்டமை (இராசமாணிக்கனார், ம., *1948:200*) தமிழ்நாட்டில் இச்சமய நெறி தொடர்ந்தும் நிலைபெற்றிருந்தமையைப் புலப்படுத்துகின்றது.

காபாலிகத்தில் இருந்து கடும் விரதங்களால் மேம்பட்டவர்களாகக் கூறப்படும் மாவிரதிகள் என்பு மாலை தரித்தவர்களாகவே கூறப்படுகின்றனர். இவர்களைப் பற்றி:

***"ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர்"***
***(பா:442)***

***"கொண்டசிகை முச்சியின்கண் கோத்து அணிந்த என்புமணி"***
***(பா:892)***

***"அவ்என்பின் ஒளிமணி கோத்து"***
***(பா:893)***

***"மனவு இடைஆமைத் தொடையல் அணிமார்பர்"***
***(பா:3990)***

***"என்பும் அரவும் அணிந்த பிரான்"***
***(பா:4022)***

எனச் சேக்கிழார் எடுத்தாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இச்சமயத்தாரின் புறக்கோலங்கள் பற்றிய செய்திகளே பெரிய புராணத்தில் காணப்படுகின்றன. அவர்தம் சமய, தத்துவக் கோட்பாடுகள் பற்றிய விரிவான குறிப்புக்கள் அறியப்படவில்லை.

**பைரவம்**

இறைவனுக்குரிய பல்வேறு மூர்த்தங்களில் அச்சமூட்டும் தோற்றத்தைக் கொண்ட பைரவரை முதன்மையாகக் கொண்டு வழிபடும் நெறியே பைரவம் என அழைக்கப்படுகின்றது. பைரவநெறியினர் நரபலி ஏற்பவர்களாக இருந்துள்ளனர். இவர்கள் "சடைமுடியினர்". கொன்றை, தும்பை மலர்களைச் சடையில் அணிந்தவர். நெற்றியில் பிறை போன்ற பொட்டுடையவர். சங்காலான காதணியுடையவர். கழுத்தில் பளிங்கு மாலை கட்டியவர். கரிய சட்டை அணிந்தவர். ருத்ராக்கத்தாலான பலவகை மாலைகளைக் கழுத்திலும் மார்பிலும் முன்கையிலும் தரித்தவர். சிலம்பினைக் காலில் அணிந்தவர். இடக்கையால் மூவிலைச் சூலத்தை மார்பில் சாத்திப் பிடித்துக் கொண்டவர். வலக்கையில் தமருகம் உடையவர்" (இராசமாணிக்கனார், ம., *2011: 133*).

இச்சிவனடியார்கள் பல இடங்களில் இருந்த மடங்களில் தங்கியிருந்து சைவத்தை வளர்த்தனர் என்பார் இராசமாணிக்கனார். (மேலது:*133*)

சேக்கிழார் சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் இறைவன் பைரவர் கோலத்தில் வந்ததாகப் பாடியுள்ளார். அறக் கறுத்திருண்டு கனந்த காளமேகச் சுருள் போலக் குவிந்து விளங்கும் சடை, இருண்ட வானத்தில் இடையிடை மின்னும் நட்சத்திரங்கள் போல் ஒளிரும் தும்பைப் புவலங்காரம், இளம் பிறையை வளைவு நிமிர்த்தி வட்டமாக்கியது போன்ற பெரிய திருநீற்றுப் பொட்டு, வெண்சங்கில் அரிந்தமைத்த வட்டத்துள் செவ்வரத்தம் பூவைச் சொருகி, காதுச் சோணையில் மாட்டிய காதணிகள், செவ்வானத்தை அந்திமாலையிருள் கவ்வுவது போல் பவளநிறத் திருமேனியை மூடும் கருநிறக் கஞ்சுகம் (சட்டை), எலும்பு

மணியாற் கோத்த சன்னவீர வடம், கழுத்தாரங்கள், கபாலத்தோடு விளங்கும் கை, திரிசூலந்தழுவுந் தோள், சிவபெருமான் மண்மேல் வந்து அடியாரை ஆட்கொள்ளுந் திறங் கண்டு அவனருளைப் பேணுவீர் என வேதங் கோஷிப்பது போல் திருவடிகளில் அமைந்தொலிக்குஞ் சிலம்பணிகள், வலது திருக்கையிற் கிடந்தொலிக்கும் உடுக்கு வாத்தியம் எனப் பைரவத் திருவுருவம் அங்கு பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

சிறுத்தொண்டரின் வழிபடு கடவுள் பைரவர் என்று கருதத் தக்கவகையிலே சேக்கிழார் கதையை நடத்திச் செல்கின்றார். சிறுத்தொண்டர் பரஞ்சோதி என்ற பெயரிலே நரசிம்ம பல்லவனுக்குப் படை நடாத்தி “வாதாபி கொண்டான்” என்று பெரும்புகழ் பெற உதவினார். இக்குறிப்பினை நோக்கும்போது போர் வீரர் வழிபடு கடவுளாக பைரவர் விளங்கியிருக்கிறாரென்று கொள்ள இடமிருக்கிறது.

பாசுபதம், மாவிரதம், காபாலிகம் போலவே பைரவமும் அகப்புறச் சைவமாக எண்ணப்பட்டது. இவர்கள் நெற்றியின் மேல் திருநீற்றினையே பொட்டாக இட்டுக்கொள்ளும் இயல்பினர் எனச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (பா:3692). “உத்தராபதி உள்ளோம்” (உத்தரம்-வடக்கு, பதி-இடம்) எனச் சொல்வதால் இவர்கள் வடநாட்டிலிருந்து வந்தவர்கள் என்ற கருத்தினையும் வலியுறுத்திச் செல்கின்றார்.

**“வடிசேர் சூல கபாலத்தார்**
**வடதே சத்தோம் என்றார் வண்**
**துடிசேர் கரத்துப் பயிரவர்” (பா:3707)**

எனக் குறிப்பிடுவதன்மூலம் இதனை அறிந்து கொள்ள முடிகின்றது. மூன்று இருதுகள் (6மாதம்) கழித்துப் பசுவினை வீழ்த்து உண்ணும் பழக்கத்தவர் பைரவர் என்பதையும் சேக்கிழார் குறித்துள்ளார் (பா:3712). திருஞான சம்பந்தர், “பசுவேட்டு எரி ஓம்பும் சிறப்பர்” (சம்பந்தர் - 1:80.1) எனக் குறித்துள்ளமையினையும் இவ்விடத்தில் பொருத்திப் பார்க்க முடியும். சிறுத்தொண்டர் சிவனடியாராக வந்த பயிரவரை நோக்கி,

**“உமக்கு அமுதாம் பசுத்தான் இன்னதென**
**ஏல அருளிச் செயப்பெற்றால்**
**யான்போய் அமுது கடிதமைத்துக்**
**காலம் தப்பாமே வருவேன்**
**என்று மொழிந்து கைதொழுதார்”**
**(பா:3713)**

எனச் சேக்கிழார் அமைத்துள்ளார். பைரவர் சிறுத்தொண்டரைப் பார்த்துத் தாம் உண்ண விரும்புவது நரப்பசு என்றும், அதுவும் ஐந்து வயதுக்குட்பட்டதாகவும், உறுப்பில் மறுவற்றதாகவும் இருத்தல் வேண்டும் என்றும் கூறினார். அவனும் ஒரே மகனாதல் வேண்டும், தாய் பிடித்துக் கொண்டிருக்கத் தந்தை அவனை அரிந்து கொடுப்பின் உண்பதாகப் பைரவி கூறினான். பள்ளிக்குச் சென்றிருந்த பாலகனை அழைத்து வந்து பைரவர் சொன்னபடி கறி சமைத்துக் கொடுத்த காட்சியைச் சேக்கிழார் படிப்பவர் உள்ளம் குழைந்துருகும்படி பாடியுள்ளார்.

சிறுத்தொண்டர் வட நாட்டிலிருந்து வந்த பைரவத்துறவியின் விருப்பப்படி தம் ஒரே மகனைக் கறி சமைத்து அத்துறவிக்குப் படைத்ததாகப் பெரியபுராணம் கூறுகிறது. இங்ஙனம் நரபலி கொடுத்து வழிபடும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததா? என்ற வினா எம்முன் எழுகின்றது.

கி.பி. 6,7,8 ஆம் நூற்றாண்டுகளில் பாசுபதர், காபாலிகர், காளாமுகர் என்பவர் பைரவர்க்கும் காளிக்கும் இரத்தத்தையும் மதுவையும் படைத்தனர். உருத்திரன், காளி, சாமுண்டி ஆகியோர்க்கு வடஇந்தியாவில் கோயில்கள் இருந்தன என்பதும் காபாலிக பைரவாச்சாரியாரைப் பற்றிய வருணனையும் பாணர் எழுதிய ஹர்ஷ சரிதத்தில் இருக்கின்றன. (மேலது:132) எனவே, இவ்வழிபாட்டு

வகைகள் பல்லவர் காலத்தில் தமிழகத்தில் இருந்திருத்தல் வேண்டும். மாமல்லபுரத்திலும், திருச்சிக் குகைக்கோயிலிலும், புள்ள மங்கைச் சிவன் கோயிலிலும் துர்க்கைக்குத் தலையை அறுத்துத்தரும் பக்தர்களைக் குறிக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன.(மேலது:132) இவை அக்காலத்தில் தெய்வங்களுக்கு மனிதர்களைப் பலியிட்டனர் என்ற கருத்துக்கு வலுச் சேர்ப்பதாகவே அமைகின்றது. மேலும், சிவன் பைரவராக வந்து சிறுத்தொண்ட நாயனாரிடம் பிள்ளைக்கறி கேட்ட கதை 11ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி வரை கொண்டாடப்பெற்றது. முதலாம் இராசராசனின் தஞ்சைப் பெருங்கோயில் வழிபடு திருமேனியாகச் சிறுத்தொண்டர் மகன் சீராளன் சிலை ஏற்படுத்தப்பட்டதனை இராசராசனின் கல்வெட்டால் அறியமுடிகின்றது. *(பரமசிவன்,தொ., 2005:11)*

**காபாலிகம்**

காபாலிகர் சிவனைக் கொடிய பைரவ வடிவத்தில் வணங்கினர். உடம்பில் நீறு பூசினர். புலித்தோலாலான கௌபீனத்தை அணிந்தனர். மண்டையோட்டு மாலை தரித்தவர்களாககபாலம்தாங்கியபடிபிச்சை யெடுப்பவர்களாகச் சுட்டப்படுகின்றனர். இத்தன்மைகளை உடையவர்களான காபாலிகரைச் சைவ நாயன்மார்கள் தம் பாடல்களில் வெளிப்படுத்தினர். இதனைச் சேக்கிழாரும் குறித்துள்ளார்.

> **“பல்ஊர் வெண் தலைக்கரத்தார் பயிலும் இடம்..” *(பா:1485)***
>
> **“மாபாவிக் கடை அமணர் வாகீசத் திருவடியாம் காபாலி அடியவர்பால் கடக் களிற்றை விடுக என்னப்”**
>
> ***(பா:1379)***
>
> **“ஓவாதே பொழியும் மழை ஒருக்கால் விட்டு ஒழியும் எனக்**
> **காவாலி திருத்தொண்டர்தனி நின்றார்.”**
>
> ***(பா:1205)***

சைவர்களுள் தீவிரவாதப் போக்கைக் கொண்ட சைவப் பிரிவினர்களாகவே காபாலிகர் எடுத்தாளப்படுகின்றனர். பல்லவ மன்னர் காலத்திலேயே தமிழ்நாட்டுச் சைவத்தில் பாசுபதம், காபாலிகம், காளாமுகம் ஆகியன செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கு கல்வெட்டுக்களும் சான்றுகளாக அமைவதைப் பேராசிரியர் வேலுப்பிள்ளை எடுத்துக் காட்டியுள்ளார். சோழ அரசின் எழுச்சிக் காலமாக அமைந்த கி.பி. 10ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் தமிழ்நாட்டில் காபாலிகர்கள் காணப்படவில்லை. கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கன்னடக் கல்வெட்டுக்கள் காளாமுகர், காபாலிகரைப் பற்றிப் பேசுவதால் இந்த நெறியாளர்கள் கன்னட நாட்டுக்குச் சென்றிருக்க வேண்டும் என்பார் தொ.பரமசிவன். *(பரமசிவன்,தொ., 2005:10)*

**வாமம்**

“சடமும் சித்துமாகிய அனைத்தும் சக்தியின் பரிமாணமே. வாம நூலில் விதித்த முறையே ஒழுகிச் சக்தியில் லயித்தலே முத்தி” என்பது வாம மார்க்கத்தினர் கொள்கை. விருப்புக்களை ஒறுப்பதன் மூலம் ஆன்மீக முன்னேற்றம் காணவியலாதென்றும், விருப்பு, பற்று என்பனவற்றைத் துய்த்து, அதன் வழி விடுதலைக்கான மார்க்கத்தை அடைதல் வேண்டுமென இவர்கள் குறிப்பிடுவர். *(கிருஷ்ணராஜா,சோ., 2004: 89)* அவ்வகையில் போகத் துய்ப்பிற்கு அவர்கள் முதன்மையளிக்கின்றனர்.

சேக்கிழார் இயற்பகை நாயனார் புராணத்தில் இறைவன் காமுகர் “வேடம் தாங்கி அடியாரைச் சோதனை செய்ய வந்ததாகக் குறிப்பிடுவார். சிவனடியார் வேண்டும் பொருள் எதுவாயினும் இல்லை என்னாது கொடுத்து மகிழும் இயல்புடையவர் இயற்பகை நாயனார். அவரது அன்பின் திறத்தினை உணர்த்த சிவன் காமுக வேதியர் உருக்கொண்டு வருகின்றார்.

"அன்பனே உன் காதல் மனைவியை எனக்குத் தருக" எனக் கேட்கின்றார். "தாங்கள் என்பால் இல்லாத பொருளைக் கேட்டு எளியேனை அவல நிலைக்கு ஆளாக்காது, உள்ள பொருளைக் கேட்டது யான் செய்த தவப்பேறே ஆகும்" எனக் கூறி "கட்டிய மனைவியை அவரிடம் ஒப்படைப்பதாகப் பாடப்பட்டுள்ளது. சிவன் கொண்ட அவ்வடிவத்தினைச் சேக்கிழார் பின்வருமாறு வர்ணிப்பார்:

> **"ஆயும் நுண்பொருள் ஆகியும் வெளியே**
> **அம்பலத்துள் நின்று ஆடுவார் உம்பர்**
> **நாயகிக்கும் அஃது அறியவோ பிரியா**
> **நங்கைதான் அறியாமையோ அறியோம்**
> **தூயநீறு பொன்மேனியில் விளங்கத்**
> **தூர்த்த வேடமும் தோன்ற வேதியராய்**
> **மாய வண்ணமே கொண்டுதம் தொண்டர்**
> **மாறாத வண்ணமும் காட்டுவான் வந்தார்"**
> ***(பா:407)***

சேக்கிழார் கூறும் காமுகர்க்கே உரிய அந்தத் தூர்த்த வேடத்தினை வாமம் சார்ந்ததாக அனுமானிப்பதற்கான வாய்ப்புள்ளது.

## முடிவுரை

அறுவகைச் சமயம் என்ற வகையில் பாசுபதம், மாவிரதம், காபாலிகம் முதலான சைவப் பிரிவுகளைக் குறிக்கும் சேக்கிழார் அந்நெறியினரை சமூகத்தால் நிராகரிக்கப்பட்டவர்களாகவோ சமூகத்திலிருந்து விலகி வாழ்பவர்களாகவோ காட்டாது சமூகத்தில் உயர்நிலையில் மதிக்கத்தக்கவர்களாகவே காட்ட விழைகின்றார். "மயக்கம் செய்யும் பிறவியை அறுப்பவர்" என மாவிரதியரையும் "பெருமைமிகு பயிரவத் தொண்டர்" என பைரவரையும் சிறப்பிப்பித்துக் கூறுவது இதனைத் தெளிவுபடுத்துகின்றது. சேக்கிழார் பெரும்பாலும் சைவப் பிரிவினர்களுடைய புறத்தோற்றம், அவர்களது செயற்பாடுகள் குறித்தே அதிக கவனஞ் செலுத்தியுள்ளார். அந்நெறியினர்களுடைய சமய தத்துவக் கோட்பாடுகள் குறித்து விரிவாக ஆராயவில்லை. வெவ்வேறு சைவப் பிரிவினரைக் குறித்து விளக்கும் சேக்கிழார் "அறுசமயத் தலைவராய் நின்றவர்சுசுஎனக் குறிப்பதன் மூலம் சிவனே எல்லா நெறிகளுக்கும் மூலப் பரம்பொருளாய் நிற்கின்றார் என்ற கருத்தினால் அனைத்துப் பிரிவுகளையும் ஒன்றிணைத்துச் சைவம் என்ற பொதுமையில் அவற்றை வெளிப்படுத்திச் சென்றுள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

## உசாத்துணை நூல்கள்

1. நடராசன், பி.ரா. *பெரியபுராணம் மூலமும் உரையும்*. சென்னை, உமா பதிப்பகம்.
2. இராசமாணிக்கனார், ம. 1968. *பல்லவர் வரலாறு*. சென்னை, கழக வெளியீடு.
3. பரமசிவன், தொ., 2005, *சமயங்களின் அரசியல்*. சென்னை, கங்கு வெளியீடு.
4. கந்தையா, மு. 1998. *சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி*. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
5. செல்வமனோகரன், தி. (க.ஆ.), 2014. *"தேவாரங்கடு புலப்படும் சைவப்பிரிவுகள்"*. மூவர் தமிழும் சை வநெறியும், கொழும்பு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
6. இராசமாணிக்கனார், ம. 2011. சைவ சமய வளர்ச்சி, சென்னை, பும்புகார் பதிப்பகம்.
7. வேலுப்பிள்ளை, ஆ. (க.ஆ.), 1987, "இந்து வெளியிலிருந்து திருகோணமலை வரை தென்கீழ்த்திசை வழிவந்த பாசுபதம்", தமிழோசை, தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
8. இராசமாணிக்கனார், ம. 1948. *பெரியபுராண ஆராய்ச்சி*. சென்னை, மாடல் பப்ளிகேஷன்ஸ்.
9. வேலுப்பிள்ளை, ஆ. 2013. *சைவசமயம்: அன்றும் இன்றும் இங்கும்*. கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.
10. கிருஷ்ணராஜா, சோ. 2004. *இந்துக் கலைக்கொள்கை*. குமரன் புத்தக இல்லம், கொழும்பு.